

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் அறந்தாங்கியில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக வர்த்தகர் அணி சார்பில்மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் தி.முத்து ஏற்பாட்டில் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு 01.03. 2025 அன்று அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தங்கமோதிரம் மற்றும் குழந்தைகள் பரிசு பெட்டகத்தை புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர் வழங்கினார்கள். உடன் அறந்தாங்கி நகர செயலாளர் க.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் அடைக்கலம், ஒன்றியச் செயலாளர்கள் வே.பொன்துரை, சக்தி கணேசன், பொன்.கணேசன். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த. மணி ராஜன், அணி அமைப்பாளர்கள் .பாத்திமா பீவி, ஹரி விமலாதி, சக்திவேல், பழனியப்பன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் இரா.தமிழ் ராசு, அருண் சேகர், முகம்மது ரபீக், நசுரூதின், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



கோவை தெற்கு மாவட்டம் சூலூர் தொகுதிக்குட்பட்ட கண்ணம்பாளையம் தியாகிகள் கலையரங்கில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத்தலைவர் அவர்களின் 72 ஆம் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு 3000 விளையாட்டு வீரர்கள் மற்றும் பள்ளி மாணவ – மாணவியர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி வழங்கி சிறப்புரையாற்றினார். தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கணபதி ரஜ்குமார் எம்பி , ராஜீவ்காந்தி, விஸ்வநாதன், கண்ணம்பாளையம், புஷ்பலதா, ராஜகோபால், இருகூர் சந்திரன், அமுதபாரதி, ஏர்போர்ட் ராஜேந்தர், மன்னவன், அன்பரசு, மகாலிங்கம்,முத்து மாணிக்கம்,யுவராஜ், ரமேஷ், ராஜ்6, நித்யா மனோகரன், குட்டி சுதாகர், கபிலன்,கௌதமன், தீனதயாளன்,சசிகுமார், வேலுச்சாமி, கார்த்திகேயன், ரகு துரைராஜ், ஆச்சிப்பட்டி பாலகிருஷ்ணன் மற்றும் மாவட்ட அணி அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள்,பகுதி, ஒன்றிய,நகர,பேரூர்,கிளை கழக நிர்வாகிகள் மற்றும் உடன்பிறப்புகள்,விளையாட்டு வீரர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு போராடும் !தமிழ்நாடு வெல்லும் !! முழக்கத்தோடு

# திருவாரூர் மாவட்ட எல்லையில் தமிழ்நாடு முதலமைச்சருக்கு பிரமாண்ட வரவேற்பு!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருவாரூர்,மார்ச், 4-

தமிழ்நாடு முதல்வர், திராவிடநாயகர், கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாகை மாவட்டத்திற்கு பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்க வந்ததையடுத்து, திருவாரூர் மாவட்டம் வழியே பயணித்த முதலமைச்சர் அவர்களுக்கு மாவட்ட எல்லையான கோவில் வெண்ணியில் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா , மாவட்டக் கழக செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. ஆகியோர் தலைமையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்து , தமிழ் மொழிப்போர் நாயகர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு "தமிழ்நாடு போராடும் !தமிழ்நாடு வெல்லும் !! என்கிற விண்ணதிரும் முழக்கங்களோடு வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த வரவேற்பு நிகழ்வில் தொழில்முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்டக்கழக செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ, , அவைத்தலைவர் க.தன்ராஜ், கழக சட்டத்திருத்தக்குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கம் ஜி.பாலு, முன்னாள் துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள், மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ்.காத்திக், எம்.ராமகிருஷ்ணன், மு. வெங்கடேசன், சாந்தி பாஸ்கர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆர். எஸ்.பாண்டியன், ப.ஆடலரசன் , ஞானசேகரன், நகர்மன்ற தலைவர்கள் மன்னை த.சோழராஜன், கவிதா பாண்டியன்,பாத்திமா பஷீரா, மும்தாஜ் நவாஸ்கான், விஜயலெட்சுமி முருகேசன், முன்னாள் ஒன்றியக்குழு தலைவர் சோம.செந்தமிழ் செல்வன்.

ஒன்றிய செயலாளர்கள் வீ.அன்பரசன் , தெட்சிணாமூர்த்தி ,ஆர்.பாலச்சந்திரன் , வீ.எஸ்.ஆர்.தேவதாஸ், பால.ஞானவேல், டி.எஸ்.டி.முத்துவேல், சித்தேரி சிவா, நா.கவியரசு, கே.வி.கே. ஆனந்த், , ஜோதிராமன் , ப.பிரபாகரன், கேப்டன் செல்வராஜ், இரா.மனோகரன், புலிவலம் .ஏ.தேவா, ப.பிரகாஷ், இரா.மனோகரன், ஐ.வி.குமரேசன் நகர செயலாளர்கள் வீரா.கணேசன், ஆர்.ராஜசேகரன், எஸ்.வி.பக்கிரிசாமி, பா. சிவநேசன், ஏ.கே.டி. சேரன், நன்னிலம்.பக்கிரிசாமி, சிவ.தியாகு, பூண்டி. கே. கலைவேந்தன்.

மன்னார்குடி ராஜகோபாலசுவாமிகள் அறங்காவல் குழு தலைவர் இளவரசன், பொதுக்குழு உறுப்பினர்கள் டி.செந்தில், கே.எஸ்.எஸ்.தியாகபாரி, ஆர்.முருகேசன் கணபதி,செல்வ.ஜெயதேவன் ,கலைவாணி மோகன் , கணபதி, காஞ்சித்துரை, கமாலுதீன் , மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் பனங்குடி ஏ. எஸ்.குமார்,பகலவன், வி. ஆர்.என்.பன்னீர், எம்.என். ராஜா, ஷோபா கணேசன், மீனாட்சி சூர்யபிரகாஷ், சதீஷ், தாஜுதீன், ராஜ். என்கிற கருணாநிதி, எண்கண்.மணி,குன்னலூர் அன்பழகன், பா.அரவிந்த், தேசபந்து, வழக்கறிஞர். விநாயக மூர்த்தி, ஆர்.வி. ஆனந்த் , ஆர்.பிரபாகரன் , கரிகாலன், டாக்டர் திவாகரன் .

மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் இரா.சங்கர், மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் ஆர்.வி.எல்.ரவி, மாவட்ட மகளிர் அணி தலைவர் ராணிசேகர் , மற்றும் முன்னாள் இந்நாள் மாநில , மாவட்ட ,ஒன்றிய ,நகர , பேரூர் கழக நிர்வாகிகள் , கழக தோழர்களுடன் பெருந்திரளான பொதுமக்களும் , ஏராளமான பெண்களும், மாணவ மாணவிகளும், இளைஞர்களும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களும் பங்கேற்று திராவிட நாயகரை வாஞ்சையோடு வரவேற்றனர்.

### முதல்வர் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு

# நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பாக நலத்திட்ட உதவிகள்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வழங்கினார்!

நாமக்கல், மார்ச். 4 -

கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாளினை முன்னிட்டு துணை முதலமைச்சர் கழகத்தின் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, இராசிபுரம் ஒன்றியத்தில் உள்ள அணைக்கும் கரங்களில் காலை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இராசிபுரம் ஒன்றியம் சந்திரசேகரபுரம் பஞ்சாயத்தில் உள்ள அணைக்கும் கரங்கள் மனநல மறுவாழ்வு மையத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மா. கார்த்திக் ஏற்பாட்டில், இராசிபுரம் ஒன்றிய கழக செயலாளர் கே.பி.ஜெகநாதன் தலைமையில், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி. விஸ்வநாத் முன்னிலை யில், நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு 84 பெண்களுக்கு உடமைகள், மின்விசிறி, பெட்சிட், பாய் போன்ற நலதிட்ட உதவிகள் வழங்கி காலை உணவு வழங்கி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கினார். முன்னதாக தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்தார்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய பொருளாளர் ரவி (எ) முத்துச்செல்வன், முருகேசன், சபாபதி, .வருதராஜ், முத்துசாமி, சிவராமன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் பன்னீர் செல்வன், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சிவசேகரன், துணை அமைப்பாளர்கள் தங்கவேல் , வருதராஜ், பொன்னுசாமி , சரவணன், சங்கர் , நவீன் பிரசாத் இராசிபுரம் நகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வி.பாண்டியன் ,லவன் குமார், வார்டு இளைஞர் அணி நிர்வாகி கள் சிபி, வினோத், சஞ்சய், கிசோர் ஜெகதீஸ்குமார், பெருமாள், பிரகாஷ், மாதேஷ்வரன் மற்றும் அணைக்கும் கரங்கள் நிர்வாகி ஜாய் ரோசலின் பங்கேற்றனர்.




திருப்பூரில் மாணவர் அணி மற்றும் அனைத்து "மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு" தமிழ்நாடு (FSOTN) சார்பில் ரயில் நிலையம் அருகில் உள்ள பி.எஸ்.என்.எல், அலுவலகம் முன்பு இந்தியைத் திணிக்கும் ஒன்றிய அரசின் நடவடிக்கையை கண்டித்தும், புதிய கல்விக் கொள்கையை ஏற்காவிட்டால் தமிழ்நாட்டிற்கு நிதி தரமாட்டோம் என பேசிய ஒன்றிய அமைச்சரின் பேச்சைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் வடக்கு மாநகர மாணவர் அணி அமைப்பாளர் செ.திலகராஜ் தலைமையில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் து.கோபிநாத் முன்னிலையில் நடைபெற்றது. இதில் அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் , இந்திய மாணவர் சங்கம், சமூகநீதி மாணவர் இயக்கம், தமிழ்நாடு மாணவர் காங்கிரஸ், திராவிட மாணவர் கழகம், திராவிட மாணவர் பேரவை, புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி, மக்கள் நீதி மய்யம், ம.தி.மு.க. மாணவர் அணி, மாணவர் இந்தியா, முற்போக்கு மாணவர் கழகம், முஸ்லிம் மாணவர் பேரவை உள்ளிட்ட அமைப்புகளை சார்ந்த நிர்வாகிகள் தோழர்கள், கல்லூரி மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கழக தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட கழக மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் ஜாகிர் உசேன் ஏற்பாட்டில் சோலார், அட்சயம் அறக்கட்டளையில் உள்ள முதியோர்களுக்கு அறுசுவை உணவை மேயர் சு.நாகரத்தினம் சுப்பிரமணியம் வழங்கினார். நிகழ்வில் மாநகர துணை செயலாளர்கள் விமல், பாத்திமா மாமன்ற உறுப்பினர் சக்திவேல், மாநகர இளைஞரணி அமைப்பாளர் சேந்தபுகழன், மாவட்ட துணை அமைப்பாளர் சீனிவாசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திருப்பூர் மத்திய மாவட்டம், தெற்கு மாநகரம், வாலிபாளையம் பகுதி, 51 வது வட்டக் கழகத்தின் சார்பில் காட்டுவளவு ஆர்விஈ லேஅவுட் பகுதியில் தெற்கு மாநகரச் செயலாளர் டிகேடி மு.நாகராசன் தலைமையில் கழக கொடியேற்றி பொது மக்களுக்கு இனிப்புகளை வழங்கி, தமிழ்நாட்டின் நலன் காக்கும் உறுதிமொழியை ஏற்றனர். இதில் வட்டக் கழக செயலாளர் பொ.ஆனந்த், பகுதி துணை செயலாளர் வை.கணேசன் உள்பட மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் 72வது பிறந்த நாள் விழா வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆலோசனைப்படி,தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் அவர்களின் வழிகாட்டுதலுடன் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் பி.எஸ்.சரவணன் தலைமையில் பையர்நத்தம் கிராமம் உடையார் தெருவில் ஒன்றிய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் ஆ.மாதேஸ் ஏற்பாட்டில் கழக கொடியேற்றி பொது மக்களுக்கு அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கி உறுதிமொழி ஏற்கப்பட்டது.நிகழ்வில் கிளைக்கழக செயலாளர் பூக்கடை ஆ.வெங்கடேசன், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் மா. சக்திவேல்,சதா.சுர்ஜித் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### வட்டச் செயலாளர் சை.மு.சேகர் தலைமையில்

# சைதை 139 அ வட்டத்தில் முதல்வர் பிறந்த நாள் நிகழ்ச்சிகள்

## கொடியேற்றி இனிப்பு -உணவு வழங்கல்!

சென்னை, மார்ச் 4 -

மாவட்ட செயலாளர். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர். மா.சுப்பிரமணியன் பகுதி செயலாளர். எம். கிருஷ்ணமூர்த்தி. ஆகியோர் அறிவுறுத்தலின் படி, கழகத்தலைவர். முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாள் முன்னிட்டு 1.3.2025 அன்று வி. எஸ். முதலி தோட்டத்தெருவில் உள்ள வட்டக் கிளை அலுவலகத்திலும், ராகவன்காலனி சந்திப்பிலும். மாவட்ட பிரதிநிதி.டி.என். சிவமணி தலைமையில் மாநில துணை செயலாளர். எம். எஸ். ஹரிபாபு, மாவட்ட அமைப்பாளர் சைதை. சாதிக் முன்னிலையில் வட்டச்செயலாளர். சை. மு. சேகர் கழகக்கொடி ஏற்றி பொது மக்களுக்கு சர்க்கரை பொங்கல் வழங்கினார்.

வட்டத்திற்குட்பட்ட பின்வரும் பாகங்களில் வட்டச்செயலாளர். சை.மு.சேகர் கழகக்கொடி ஏற்றியும் இனிப்பும் வழங்கினார். விவரம். 1) காமராஜ்காலனி அப்பாதுரைதெருவில் வட்டத்துணைச்செயலாளர். சுமதி தீனதயாளன், என். தீனதயாளன் ஆகியோர் ஏற்பாட்டிலும், 2) வீதிமாரியம்மன் கோயில்பகுதியில் பகுதிபிரதிநிதி. ஜி. ஏழுமலை தலைமையில் துளசிசந்திரசேகர், ஆட்டோ. சேகர், பா. மோ. கார்த்திக், பி.பாலு, இ.ஸ்ரீதர் முன்னிலையிலும், 3) வ.உ.சி. பிளாக் பகுதியில் வட்ட செயற்குழு உறுப்பினர்.என்.ரமேஷ் தலைமையில், கே. மணிகண்டன், ஜெ.விஜய குமார் முன்னிலையிலும், 4)மேற்கு ஜோன்ஸ் சாலையில் வட்டச்செயற்குழு உறுப்பினர். கே. விஜயகுமார் தலைமையில் த.சேகர் எஸ். சந்தானம், முன்னிலையிலும், 5)சேகர் நகர் நடராஜன் தெருவில் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை பகுதி அமைப்பாளர். பூ.பாஸ்கர் தலைமையில் ப.எழிலரசன், ஜெ.சம்பத், ஜி. சீனிவாசன், சி. மதியழகன், கே. விஜய் முன்னிலையிலும், 6)சேகர்நகர் ராஜாம்பாள்தெருவில் பாகத் தலைவர்.ஜெ. தமிழ்செல்வன் பகுதி துணை அமைப்பாளர் ஜி.நாகதேவி ஆகியோர் ஏற்பாட்டிலும், தேவுதெருவில் இலக்கிய அணி பகுதி துணை தலைவர். இ.வ.ரகுபதி தலைமையில் இ. வரதன் முன்னிலையிலும் அண்ணா தெருவில் வட்ட பொருளாளர். பூபதி.வெங்கடேசன் தலைமையில் ப.சிவகுமார், கொரியர் சுரேஷ்,எம்.சதீஷ், என். பாபு முன்னிலையிலும் வட்டச்செயலாளர். சை.மு.சேகர் கழகக்கொடி ஏற்றி இனிப்பு வழங்கினார். பங்கேற்ற கழகத்தினர். வி. மதிவாணன்,வி. வாசுதேவன், ஆர்.தாமோதரன்,மு.காத்தவராயன், வி. ஆதிகேசவன்,ஜி. தங்கராஜ், கே.வெங்கடேசன், ப.தினகரன் ஜி.ரஞ்சித்,எஸ்.பி.தினேஷ்குமார், எஸ்.முருகன், ஆர். தண்டபாணி, ப. மோகன்.உ.மகேஷ்,ஏ.எம். சேகர், ஜெ. வெங்கடேசன், கே.பி.சிவா, ஜெ.கார்த்திக் கே.ராஜேந்திரன், எஸ்.கிருஷ்ணமூர்த்தி,க.சிவசண்முகம், இ.ராஜா, மோ.பிரபுராம், ஆர். மெய்யழகன்,கே. வேலாயுதம், எஸ்.ஜீவா,எஸ். கிஷோர்,யு. உதயஜீவா, எம். அருணாச்சலம்,எஸ்.சக்திவேல், பி.உதயசக்தி, பி.சந்தோஷ், பி.வினோத்குமார், ஜெ.மனோஜ் குமார், எம்.சஞ்சய், கே.விக்னேஷ், மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ஆர்.ஏ.துரைசாமி

**மார்ச் 4 (1978)**



**நாகை நகர செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**மிசா காலத்தில் நாகை நகரமே வியக்கத்தக்க வகையில் "அண்ணா சிலை" அமைத்து தலைவர் கலைஞர் அவர்கள் திருக்கரங்களால் திறக்கச் செய்தவர்.**

**நாகை வீட்டு வசதி சங்கத் தலைவராகவும், நீலாயதாட்சி அம்மன் கோவில் அறங்காவலர் குழுத் தலைவராகவும் பணியாற்றி மக்களின் அன்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**